# இந்துசாதனம்

DUPLICATE

(1889)

# THE HINDU ORGAN.

## குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."


பத்திரிக் கிரயம்.

(முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.)

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப்பட்டினம்: | ஆ சகக்கு | ரூ. உ-உ0. |
| வெளியூர், இந்தியா: | " | ரூ. க-உ0. |
| தொலைப்பகுதி: | " | ரூ. க-எ0. |
| தனிப்பிரதி | சதம் | -0ஐ. |

விளம்பர விகிதம்.

| | | ரூ. ச. |
|---|---|---|
| முதன்முறைக்கு:— | ஒருகலம் | எ-ம0. |
| " | அரைக்கலம் | ச-00. |
| " | கால்கலம் | உ-௫0. |
| " | ஒரு அங்குலம் | -௫0. |

அடுத்தமுறைகட்கு விகிதங்களில் குறைவாகும்.

புத்தகம் — கூO. | யாழ்ப்பாணம்:—காலயுக்திஞு மார்கழிமீ சஅ; ககூகஅ ம்ஆ டிசம்பர்மீ ககூஉ. | இலக்கம்—உரு.


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானூர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## விளம்பரம்.

விலை சகாயத்திற்கும்
ஜவுளி நாணயத்திற்கும்
பேர்போனகம்பனி எது?
மதுரை மூ. க.
இராமையர் அன் சன்ஸ்.

எங்கள் ஜவுளிக்கம்பனியில் சுமார் ச0 வருஷ காலமாக எங்கள் நேர் பார்வையின்பேரில் கைதேர்ந்த நெசவுகாரர்களைக்கொண்டு பல தேசங்களிலுமுள்ள வியாபாரிகளுக்கும் மற்றும குடித்தனகாரர்களுக்கும ஏராளமான நிலுசுகள் தயார் செய்து கொடுத்துக்கொண்டும், ஏராளமான நிலுசுகள் கைவசம் வைத்துக்கொண்டும், விரும்பி எழுதும் நிலுசுகளை யாதொரு பிசகின்றி அனுப்பியும் விசேஷ வியாபாரம் செய்து வருகிறோம் என்பது உலகம் பூரா அறிந்த விஷயம். தவிரத் தற்கால நாகரீகத்திற்குத் தக்கபடி பலவூர் அநேக நூதன நிலுசுகளும் வரவழைத்து ஸ்டாக்கில் வைத்துக்கொண்டு சொற்ப லாபத்திற்கு நேரிலும், வி பி யிலும் அனுப்பிக்கொண்டு வருகிறோம். அசலூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனித்து வி பி யில் அனுப்புவோம.

F. M S. பெடரேடெட்மலாய்ஸ்டேட்களில் இருப்பவர்கள் ஆர்டருடன் முற்பணம் அனுப்பவேண்டும் அல்லது பாங்க் மூலமாய் பெற்றுக்கொள்ளலாம். சிங்கப்பூர், பினாங்கு என்னும் இடங்களுக்கும வி பி யில் அனுப்புவோம்.

எங்கள் ஜவுளி விபரம் விலை யாப்தா (Catalogue.) இனமாக எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

மூ. க. ராமய்யர் அன் சன்ஸ்
சுதேசி ஜவுளி வியாபாரிகள்.
மேலைக் கோபுரவீதி
மதுரை.

## சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனல் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அபரகபஸ்பம், வங்கபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூ

ரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின்விலை இறுத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைறாத்தலுக்கு ரூபா க0. கால் றாத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய தொடுவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினுல் முன் மனி ஒடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார
வைத்தியசாலை,
இல. 96 முதல் குறுக்குத்தெரு, கொழும்பு.

முதிரை, வேம்பு, பாலை,
சோமுந்திரி, பூவரசு,

மேற்சொல்லிய மரங்கள் பலவித நீளத்திலும் சுற்றளவிலும் கசேரிரோட்டில் தாக்குளத்திற்குச்சமீபமாயுள்ள ஓர் வளவிற் போடப்பட்டிருக்கின்றன.

வாங்க விரும்புவோர் வேண்டிய விபரங்களையென்னிடம் அறிந்துகொள்ளலாம்.

Dr. A Chinnia,
Pettah Dispensary,
Jaffna.

## விளம்பரம்.

தேவாலயங்களுக்கு உபயோகமான திறம் பட்டுக்குடைகள், ஆலவட்டம், கொடி, சுருட்டி, ஜாலர், மகரதோரணம், காவடிசகலாத்து, முதலானவைகள் இந்தியாவில் சித்திரவேலைக்காறர்களால் செய்யப்பட்டு நமது சாப்பில் சகாயமான கிரயத்திற்கு கொடுக்க விருக்கின்றன. இன்னும் அவர் அவர்கள் கேட்கும் ஓடர்களுக்குத் தக்கமாதிரிதயாரித்துக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

இப்படிக்கு,
மூ. நாகலிங்கம் அன் சன்ஸ்
பறங்கித் தெரு,
யாழ்ப்பாணம்.

## கேசரஞ்சித தைலம்.




இத்தைலம் நான் உபயோகித்த தைலங்களில் மிகச்சிறந்தது" என்று கல்கத்தா நியாயப்பிரமாணகல்லூரித் தலைமை ஆசிரியர் பரிஸ்தர் டக்தர் பாஜி எல். எல், டீ. அவர்களும்,

"இத்தைலம் நறுமணமுள்ளது தலைக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடியது" என்று டக்தர் பரிஸ்தர் எல். எம். மித்திரா எம். ஏ. எம், டீ. அவர்களும்,

"தலைக்குக் குளிர்ச்சியைக் கொடுப்பதற்கு மிகச்சிறந்தது" என்று டக்தர் எம். என். பானேர்ஜி எம். டீ. அவர்களும்,

"இது நல்ல கேசரஞ்சித தைலம் தலைக்குக் குளிர்ச்சியைத் தருகின்றது" என்று டக்தர் எஜ். என். கோவ் எம், டீ. அவர்களும்,

"இதிலும் அதிக நயத்தைக் கொடுக்கக்கூடிய தைலம் வேறில்லை" என்று டக்தர் யூ. மித்திரா எம். டீ. எம், ஆர். ஏ. எஸ். எவ். சி. எஸ். அவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

கேசரஞ்சிததைலம் விலை.

புட்டி 1-க்கு ரூபா 1. தபாற்செலவின்றி ரூபா 1-8-5.

புட்டி 3-க்கு ரூபா 2-8-4. தபாற்செலவின்றி ரூபா 2-8-14.

சித்தமகரத்துவாச.

சித்தமகரத்துவாச என்னும் 'தொனிக்' ஆயுள்வேத ஒளஷதங்களுள் மிகசிறந்தது. இது விலைபெற்ற மருந்து. ஏனெனில், இதில் தங்கம் சேர்ந்திருக்கின்றது. இது செருப்புக்காய்ச்சல் முதலிய காய்ச்சல்களையும், நாட்பட்ட கழிச்சல் நோயையும், மேகச்சூட்டையும், பிரசவத்தின் பின் பெண்களுக்குண்டாகும்நோய்களையும், மண்டைப்பெலவீனத்தையும், ஞாபகக்குறைவையும், நரம்புத்தளர்ச்சியையும், கண், முகம், தோல் முதலான விடங்களிலுண்டாகும் வெளுப்புத் தோற்றத்தையும், நீரிழிவு, சோர்வாதம், குன்மம், வலி, க்ஷயரோகம்முதலிய நோய்களையும் இது அதிசயப்படக்கூடிய விதமாய்ப் போக்கடிக்கும்.

இதன்விலை தோலா 1-க்கு ரூபா 80. ஒருகிழமைக்கு உபயோகிக்கக்கூடிய மருந்து ரூபா 3.

வியாதிகளினதும் மருந்துகளினதும் விபரங்களடங்கிய 'சர்க்குலர்'கள் வேண்டியவர்களுக்கு இனமாயனுப்பப்படும்.

வியாதிகளைப்பற்றிச் சுருக்கமாயெழுதியனுப்பினால் மருந்தோடு அல்லது மருந்தில்லாமல் இந்தியா, பேர்மா, இலங்கை, தொடுவா யிராச்சியம் முதலியஇடங்களுக்கு "பிறிஸ்கிறிப்ஷன்"(Prescreption) அனுப்பப்படும்.

KAVIRAJ N. N. SEN,
Govt. Medical Diploma Holder,
18-1 & 19, Lower Chitpur Road,
CALCUTTA,

## ஜவுளி விளம்பரம்.

சுதேசிஜவுளிகள் விலைசகாயமாய்க் கிடைக்குமிடம் எது?
மதுரை எம். ஆர். வெங்கடாசலநாயுடு அன்டு சன்ஸ் ஜவுளிகம்பனியில் வாங்கலாம்.

நமது கம்பெனியில் தற்கால நாகரீகத்துக்குத் தக்கவாறு உள்ளூரில் புதுமாதிரியாகத் தயாராகும் 100, 150, 200-ம நம்பர் நூலில் ஜரிகை வேஷ்டி ஜோடிகள், சால்வைகள், சவுக்கங்கள், பலவித இங்கிலீஷ் கலரில் ஜரிகைச் சேலைகள், சாதா, டோரியா, சுன்னடி, சேலைகள் வகையராக்களும், சித்தாடை, ரவிக்கை தினிசுகளும், ஸ்ரீகாசி, பம்பாய், கல்கத்தா, புனு, சூரத், காஷ்மீர், காக்கிநாடு, காஞ்சீபுரம், கொர்நாடு, கும்பகோணம், கோயம்புத்தூர், பெங்களூர், சென்னபட்டணம், ஆரணி, சேலம், தஞ்சாவூர், திருச்சி, நெல்லூர், உப்பாடை, துயிலி, மலையாளம முதலிய இடங்களிலிருந்து ஜவுளிகள் வரவழைக்கப்பட்டு ஸ்டொக்கில் வைத்துக்கொண்டு சொற்பலாபத்திற்கு வியாபாரத்துக்கும், சொந்தப்பாவிப்புக்காரர்களுக்கும், தேவையான தினிசுகளை விரும்பிக் கேட்கும்வண்ணம் ஜவுளிகளை நேரில் வருபவர்களுக்கும், பிறதேசவாசிகள் வி. பி. மூலமாக அனுப்பும்படி எழுதுவோர்களுக்கு அனுப்பிக்கொண்டு வருகிறோம.

தவிரவும், எங்கள் கம்பனியில், பட்டோணயத்திற்கும், ஜரிகைக்கும், உத்தரவாதமாயிருப்பதால் பிறதேசவாசிகள் நம்பிக்கையாக ஏராளமான ஜவுளிகளுக்கு ஆடர்கொடுத்துவருகிறார்கள. ஒருமுறை உண்மை சோதிப்பதற்காக எங்கள விலை விபர ஜாப்தா (Catalogue) வரவழைத்து சிறு ஆடர் கொடுத்து ஜவுளிகளின் சகாயத்தைத் தெரிந்துகொள்ளலாம்.

N. B. சிங்கபூர், பினங்கு என்னுமிடங்களுக்கும் வி. பி. மூலமாகவும், மற்ற வி. பி. சட்டமில்லாத F. M. S. என்ற வெடரேட், மலாய், தென் ஆபிரிக்கா முதலிய தொடுவாய் இராச்சியப்பகுதிகளுக்கு வி. பி. சட்டமில்லாததினுல், ஆடருடன் முற்பணம் அல்லது போஸ்றல் ஆடர் வாயிலாக அனுப்பவேண்டும். அல்லதுபாங்கு மூலமாக அனுப்பவுங்கூடும்.

நமது ஆடரை எதிர்பார்க்கும்:

M. R. V. Naidu & Sons,
High Class Cloth Bazaar,
West Tower
Madura.

எம். ஆர். வெங்கிடாசலநாயுடு அன்டு சன்ஸ்,
நாகரீக ஜவுளி கம்பெனி,
மேலைக்கோபுரவாசல்,
மதுரை.

## சுதேச வைத்திய ரத்தினம்.

முன்பதிப்புகளைக்காட்டிலும் விரிவானது.

மூன்றுவதுபதிப்பு சித்திரப்படங்களுடன் கூடியது.

இப்புத்தகத்தில் தினந்தோறும் நமது காலடியில் மிதிபடும் புல், செடி, கொடி, காய், கனி, பட்டை, கட்டை, வேர், இலை, பூ, பிசின், விதை முதலியவைகளைக் கொண்டும், நமது நாட்டுக் கடைகளில் சாதாரணமாய்க் கிடைக்கக்கூடிய கடைசரக்குகளைக்கொண்டும் வைத்தியர் உதவியின்றி, அவரவர்களே சூரணமாகவும், பஸ்பமாகவும், செந்தூரமாகவும், மாத்திரையாகவும், காஷாயமாகவும், வடகமாகவும், மெழுகாகவும, லேகியமாகவும், திராவகமாகவும், களிம்பாகவும், பிளாஸ்திரியாகவும் இந்திய ஆயுர்வேத முறைப்படியும், இங்கிலிஷ் வைத்திய முறைப்படியுஞ் செய்து, சாதாரண வியாதி முதல் பெரிய வியாதியும் நாட்பட்டதுமானவைகளுக்கும, உபயோகிக்கவேண்டிய விதத்தையும் அளவையும், ஒவ்வொரு பதார்த்தங்களுக்கும் தமிழ், இங்கிலிஷ், லத்தின் முதலிய பாஷைகளிலுள்ள பல பெயர்களுடனும் விபரமாய் வரையப்பட்டிருக்கின்றது. இன்னும் இப்புத்தகத்தில் வியாதிகளை இலகுவாய்த் தெரிந்துகொள்ள "ரோக அட்டவணை"யும், ஒவ்வொரு வியாதிகளுக்கும் தமிழ் இங்கிலிஷ் பெயர்களுடனும், ஒவ்வொரு வியாதிகளுக்கும் உபயோகிக்கவேண்டிய ஒளஷதங்களும் எழுதப்பட்டிருக்கின்றது. சுருக்கச் சொல்லுகில் தேக ஆரோக்கியத்தையும், நோயில்லா வாழ்வையும, சுகசெல்வான்மைகளையும் அளிக்கக்கூடியபுத்தகம் இதுவேயன்றி வேறில்லை. 570 பக்கங்களுள்ளது. கலிக்கோ பைண்டு ரூபா 3. தபால சார்ஜ் அணு 4. "பெதர் வெயிட்" என்னும் விலையுயர்ந்த பேப்பர் பதிப்பு கலிக்கோ பைண்டு ரூபா 3, அணு 8. தபால் சார்ஜ் அணு 5. சிங்கப்பூர் முதலிய அன்னிய நாடுகளுக்குத் தபாற் செலவு அணு 8.

"நமது சிறிய சத்துருக்கள்" அல்லது பிளேக், கலரா, மலேரியா முதலிய கொள்ளைநோய்களின் உற்பத்தி விபரமும், அவற்றிற்கான பரிகாரங்களும். தபாதசெலவுடன் அணு 8.

மானுட ஜீவிய சிந்தாமணி அல்லது ஆண்மையின் அழிவும், அதனையகற்றும் விதமும். ஸ்டிப் பைண்டு ரூபா 2. கலிக்கோ பைண்டு ரூபா 3. தபாற்செலவு அணு 3. கோலாலம்பூர் முதலிய அந்நியநாடுகளுக்குத தபாற்செலவு அணு 6.

விலாசம்:—டாக்டர் எஸ். சந்திரசேகரர், குப்பகோணம்,

## அநுவாதம்.

### மாயாவாத மத நிரசனம்.

(சென்ற பத்திரிகைத் தொடர்.)

இனி, தாமதம் ஓர் குணம், விக்ஷேபசத்தியும் ஓர் குணம், குணத்திற் குணந் தோன்றுவதே பிழையாக, விக்ஷேபசத்தியில் சூக்குமபூதந் தோன்றுமாம். அதில் தூலபூதந் தோன்றுமாம். தூலபூதமோ உலககாரணமாயிருப்பது. நமது உடல் அப்பூதத்தாலாயது. உலகும் உடலுமாகிய இப்பிரபஞ்சமும் பூதங்களும் பொருள்கள். சூக்குமபூதமும் பொருள். இவை பொருளிற் பொருளாக முறையே தோன்றும். இம்முறை பொருளிற் பொருள் தோன்றுமென்பதனையே காட்டுகின்றன. அங்ஙனமாயின், பொருட்டன்மையுடைய சூக்குமபூதங்களும் பொருளிலிருந்தே தோன்றவேண்டுமன்றி, விக்ஷேபசத்தியாகிய குணத்திலிருந்து தோன்றுதல் எவ்வாறு? பொருட்பிரபஞ்சத்துக்குத் தாமதகுணம் மூலமாதல் யாங்ஙனம்? பிரகிருதி குணமானால் உலகுக்குப் பிரகிருதியாவது எப்படி? குணம் உருவுமன்று அருவுமன்று; ஒருபொருளைப் பற்றிநிற்பது. தான் தனித்த முதலன்று. இன்னும் உருவப்பொருட்கெல்லாம் அருவப்பொருளே காரணமாம். தூலபூதம் உருவப்பொருள். சூக்குமபூதம் அருவப்பொருள். அருவமாகிய சூக்குமபூதங்களினின்று உருவமாகிய தூலபூதங்கள் தோன்றின. அவ்வாறே சூக்குமபூதங்களுக்கும் அவற்றினும் சூக்குமமான ஒருபொருள் காரணமாகலாம். அதற்கு இன்னும் சூக்குமமான ஒருபொருள் காரணமாகலாம். இப்படியே சென்று ஈற்றில் பிரகிருதியும் பொருளாகவேவேண்டும். உருவமின்மையால் அது அருவமாகலாம். இங்ஙனமாக, மாயாவாதிகள் உணர்வின்றி விக்ஷேபசத்திவரையிற் குணமென்றும், அதன்மேற் பூதங்கள் பொருளென்றும் புலம்பாநிற்பர். இவர்க்குப் பதார்த்தவியல்பு எட்டுணையுந் தெரியமாட்டாது. தருக்கநூலாரும் திரவியம் குணம் கன்மம் சாமானியம் விசேடம் சமவாயம் அபாவம் எனப் பதார்த்தம் எழுவகைப் படுமென்பர். தன்மை வேறுபாட்டால் இவை தனித்தனி வெவ்வேறு இயல்புடையன. திரவியத்தன்மையினும் குணத்தன்மை வேறு. திரவியத்தில் திரவியத் தன்மையும் குணத்தில் குணத்தன்மையும்இருக்கும். ஒன்று ஒன்றாகாது. ஒருதன்மையில் ஒருதன்மையிராது. திரவியமும் குணமும் பிரிப்பின்றி யிருப்பினும் தன்மை வேறுபாட்டால் இரண்டுபதார்த்தங்களாக எண்ணப்படும். குணம் ஒரு திரவியத்தைப்பற்றிநிற்குமேயன்றித் தனித்திருக்கமாட்டாது. ஆகவே, திரவியவடிவான பிரபஞ்சமும் பூதங்களும் திரவியவடிவான ஒரு காரணத்திலிருந்தே தோன்றவேண்டும். அதனால், ஆதிகாரணமாயுள்ள பிரகிருதி பொருள்வடிவாய் அருவமாய் நித்தியமாய்த் தன்காரியங்களில் வியாபித்திருப்பதாய் யாவும் ஒடுங்குங்காலத்துத் தான் அவற்றை ஒடுக்கிக்கொண்டிருப்பதாய்ச் சடமாய் ஒரு சேதனனால் இயக்கப்படுவதாயிருத்தல்வேண்டும்.

மாயாவாதிகள் பதார்த்த உணர்வின்றித் தோன்றியவாறெல்லாம் புலம்பாநிற்பர். அவர் உரைக்கு ஓர் வரம்பில்லை.

அம்மட்டோ, பிரகிருதி இப்பியில் வெள்ளிபோற் பொய்யாமென்று தொடங்கி, முக்குணம் பொய், மாயை பொய், ஈசுரன் பொய், பிரமா பொய், விஷ்ணுபொய், உருத்திரன் பொய், சீவர்கள் பொய், உலகம் பொய், பாவமில்லை, புண்ணியமில்லை, சுவர்க்க நரகமில்லை, இன்பத்துன்பமில்லை, குருவில்லை, சீடரில்லை, உபதேசமில்லை, ஞானமில்லை, வேதமில்லை, ஆகமமில்லை, பந்தமில்லை, மோக்ஷமில்லை, பேரின்பமில்லை, எல்லாம்பொய் ஒன்றுமில்லை, இல்லை, இல்லை, இல்லையென்பதே மகாமந்திரம் என்று சூனியவாதமே பேசுவர். தாமே பிரமமென்பர்; பிரமத்துக்கு இந்த அலங்கோலம் வந்தகாரணம் என்னவென்றால், வாயை மூடிக்கொள்வர். இந்த மாயாவாதிகளுடைய குழறுபடைக்கு ஓர் எல்லையில்லை. எல்லாம் குழறுபடையேயாம். இதுவரையிற் சொல்லியது பற்றாது. இனி முத்திநிலையையும் ஆராய்ந்து நிரசனஞ் செய்வாம்.

சீவர்கள் பிறந்து இறந்து வரும்பொழுது புண்ணிய மேலீட்டால் நித்தியாநித்திய வஸ்து விவேகந் தோன்றும். அதனால் இகபர போக வைராக்கியமுண்டாம். பின் சமாதி சட்க சம்பர்க்கம் வரும். பின் முமுட்சுத்துவமுண்டாம். அந்நிலையில் ஒரு குரு வருவர். அந்தக்குருவும் ஒரு சீவரே. அவர் வந்து ஞானத்தை உபதேசிப்பர். அப்பொழுது, யாதெல்லாம் பொய், நான் மாத்திரம்மெய், நானே அந்தப்பிரமம் என்னும் அறிவுண்டாம் என்பர். குருவும் அவித்தை சூட்டிபோட்ட ஒருவர். இந்தச்சீவனும் அவித்தையிற் பிறந்த ஒருவன். அதிலும் பொய் மயம். இந்தக்குருவும் அந்தக் குருவும் இந்தப்பொய்யும் அந்தப்பொய்யுங் கூடி நான் பிரமம் என்று சொல்லி யறியுமாம். பொய்யாய் இல்லையாய சீவன் தன்னைப் பிரமமென்று நினைத்தால் பிரமமாய் விடுமோ? பொய்யிற் பிரதிபிம்பித்த பொய்ச்சீவன் மெய்யாய பிரமமாவதெப்படி? முகம் பிரதிபிம்பமாகாது. பிரதிபிம்பம் முகமாகமாட்டாது. பிரமம் சீவனுனதில்லை. சீவன் பிரமமானதில்லை. பிரமம் சீவனாய்ப் பிறந்திறந்து உழன்றது மெய்யாயினன்றோ, சீவன் பிரமமாவது மெய்யாம்? பொய் பொய்யேயன்றி மெய்யாகமாட்டாது. பொய்யான சீவன் ஒருபோதும் மெய்யான பிரமமாகப்போவதில்லை. எப்படிச் சீவேசபாதி பொய்யோ அப்படியே நித்தியாநித்திய வஸ்து விவேக முதலிய சாதனங்களும் பொய்; குரு வந்ததும் பொய்; உபதேசமும் பொய்; சிரவணமனன நிதித்தியாசனமும் பொய்; சமாதியும்பொய்; சீவன் முத்தியும்பொய்; விதேகமுத்தியும் பொய்; எல்லாம் பொய் பொய்யாகி, அதனால் இவர் மாயாவாதியாத லொன்று மாத்திரமே மெய்யாம்.

இந்தச் சம்பிரமத்தில் தாம் பிரமமாகிவிடுவோர்களாம். சீவர்கள் முன்னே பிரமமா யிருந்தாலன்றோ பின்னே பிரமமாகலாம். பொய்யில் முதற்பொய் பிரகிருதி. இரண்டாம் பொய் நாசதகுணம். மூன்றும் பொய் அவித்தை. நாலாம் பொய் சீவன். பிரமம் இந்தப் பொய்யிலெல்லாம் அகப்படாது சச்சிதானந்தமா யிருக்கின்றது. சீவனோ இந்நான்கு பொய்யிலும் அகப்பட்டது போதாமல், ஆவரண விக்ஷேபங்களிலும் அந்தக்கரண சூக்குமசரீரத்திலும் தூலசரீரத்திலும் ஆக, மேலும் நான்கு பொய்யிற் சிக்கிக்கொண்டு, பிறப்பிறப்பு இன்பத்துன்ப மென்னும் பொய்களிலும் மாட்டிக் கொண்டது. ஒருபொய்க்கு ஒன்பது பொய்யென்பர். இது ஒன்பதுக்கு மேலும் ஒரு பொய் கதித்துப் பத்துப் பொய்யாய் விட்டது. இந்தப் பொய்ப் பிரமங்களை யெல்லாம் மெய்ப்பிரமம் மெய்ப் பிரமம் என்று ஆயிரம்முறை செபித்தாலும் ஆயிரம் சமாதி கூடினாலும் அவையெல்லாம் ஆயிரம் ஆயிரமான பொய்களாய் மேற்படுமேயன்றி மெய்யாய பிரமமாவதெப்படி? சிவப் பிரமத்தின் பாடே இந்தக் கதியிலிருக்க, மண்ணெல்லாம் பிரமமாம், நீரெல்லாம் பிரமமாம், நெருப்பு, காற்று, ஆகாயம், பொறி, புலன், கரணம், ஆகிய இவையெல்லாம் பிரமமாம். அந்தச் சடப்பிரமங்களுக்குத் தத்துவமசியுபதேசம் பண்ணுங் குரு எவர். அவை அகப்பிரமபாவனை பண்ணுமா? அப்படியானாலன்றோ அவையும் பிரமமாம்.

ஆதலால், மாயாவாதிகளுக்குப் பொய்யே நியாணமாய் ஞானமும்பொய்யாய முத்தியும்பொய்யாவதே முடிந்த முடிபாம. பொய்யாயசீவன் என்ன சாதனஞ் செய்யினும் மெய்யாய பிரமமாகப்போவதில்லை. இதுவே மாயாவாதிகளது முத்திமுடிபாம்.

இன்னும், பிரமமிருக்குமளவும்பிரகிருதியும் உடனிருக்கும். அம்முள்ளவும் முக்குணமும அவித்தையும் சீவரும் ஆவரண விக்ஷேப சத்திகளும உடம்புகளும உலகமும் இல்லாதொழியா. அவையிருக்குமளவும் மாயாவாதிகளுக்கு முத்தி சித்தித்தலு மில்லையாம். பொய் முத்தியாயினும் கிடைத்தாற் போதுமானதே. அதற்கும் வழியில்லாதொழிந்தது.

நாம் செய்த இந்நிரசனங் காரணமாக, மாயாவாதிகள் நம்மேற் சீறிச் சினந்து நிந்தாவாக்கியப் பிரயோகஞ் செய்யாது, ஆழ்ந்து யோசித்து அடக்கமுடையவராகக் கடவர்.

## விளம்பரம்.

புதிதாக வரும் புடைவைகளுக்கு இடம் தேவையாக இருப்பதால் பின் வரும் நிறுசுகள் அதிகம் விலைகுறைத்து டிசெம்பர்மாசம் 9ம திகதி தொடக்கம் 31-ம் திகதி வரைக்கும் விற்கப்படும்.

காசிப்பட்டு காஸ்மீரம் காஞ்சிபுரம் அறுப்புக்கோட்டை பட்டணம் முதலிய சேலைகள் பலவிதமான தாவணிகள் மஸ்லின் நாரியாஸ் சீட்டிகள் மல் காரிக்கன் அறக்ஸ் சோற்றுச் சீலைகள் பெனியன், குடைகள் முதலியன.

யாழ்ப்பாண வர்த்தகசங்கம்,
யாழ்ப்பாணம்.

## தேவை.

யாழ்ப்பாண வியாபாரசமுதாயத்தின் வண்ணார்பண்ணை முதலாம் இலக்கப் புடைவைக்கடைக்கு 1919-ம் ஞூ மாசிமீ 1உ தொடக்கமாக ஓர் மானேசர் தேவை.

இருபதினாயிரம் ரூபா பெறுமதியான ஆதனப்பிணை கொடுக்கவேண்டியது.

புடைவைவியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள் மேற்படி சமுதாயத்தின் மானேசரிடம் எழுதிக்கேட்கவும்.


## விளம்பரம்.

### புதிய கையொப்ப நேயர்கள்.

எமது பத்திரிகைக்குப் புதிய கையொப்ப நேயர்களாகச் சேர விரும்புவோர் ஒருவருடப் பத்திரக்கிரயத்தை முற்பணமாக அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

இங்ஙனம்,
"இந்துசாதன" மானேசர்.



### நேத்திரரோகிகட்கோரறிவித்தல்.

கண்களிலுண்டாகும் எவ்வித நோய்களுக்கும் எந்த ஆயுள்வேதமுறைப்படி என்னுலாக்கப்பட்ட முதற்றரமான தைலங்கள், ஒளஷதங்கள் முதலியன கொண்டு நேத்திரவைத்தியம்நடத்திவருகின்றேன். காலை 8மணிமுதல் 10மணிவரையுமென்னது மருந்துச்சாலையில் நோயாளர் சிகிச்சைபெறலாம்.

நாயன்மார்கட்டு, S. சதாசிவம்பிள்ளை.



### JAFFNA CO-OPERATIVE STORES LTD.
### யாழ்ப்பாண ஐக்கியவியாபாரசங்கம்.

இச்சங்கம், கொம்பனிக் கட்டளைச்சட்டப்பிரகாரம் பதிவுசெய்யப்பட்டது.

ஒருபங்கு நூறு ரூபாயுள்ள ஆயிரம் பங்குகள் கொண்ட ஒரு லட்சம் ரூபா முதலுள்ளது.

சங்கத்தின் நோக்கம்: அரிசி, நெல், புடைவை, காய், தானிய முதலிய பல சாமான்களிலும் வியாபாரம் நடத்தல்.

1918-ம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் 26-ந் திகதிக்குச் சரியாய் நிகழும் காலயுத்தி வருஷம் ஆவணி மீ ௰உ திங்கட்கிழமை காலமே சூரியோதயத்தில் நிகழ்ந்த சுப முகூர்த்தத்திலே வியாபாரத் தொழில் தொடங்கிக் கிரமமாக நடைபெற்றுவருகின்றது. இன்னும் 500 பங்குகள் விற்பனவுக்கிருக்கின்றன. விரும்பியவர்கள் சங்கத்தின் லேககருக்கு மனு அனுப்பும்படி கேட்கப்படுகிறார்கள்.

M. Asaipillai,
லேககர்,
J. C. S. Ltd.



### புதிய ஜவுளி நூல் கம்பெனி.

நயம் தினிசுகள். சொற்பலாபம். விலைசரசம்.

ஐயா,

அடியிற்கண்ட நம்முடைய ஜவுளிநூல் கம்பெனியில் பற்பல ஊர்களிலிருந்து உற்பத்தியாகி வருகின்ற தற்காலத்திற்கேற்ற நாகரீகமான தினிசுகளாயும் விலைகள்சரசமாயும் அனுப்பிக்கொண்டுவருகிறோம்.

ஹோம்ரூல் காப்பிக் கலரும், கறுப்பு சிவப்பு 1-ம் நம். 60×40-ம் நம்பர் நூல்களில் கரை 1இஞ்சு வைத்து, பச்சைக் கரை சிகப்புக் கரை கறுப்புக்கரைகள் வைத்து முந்தியில் 4 அல்லது 5 இஞ்சு பட்டுப்போட்ட 16 முழச் சேலை 1-க்கு ரூபா 7-8-0. டை மாதிரியில் 44×40 நம்பர் நூலிற் போட்ட 16முழச்சேலை 1-க்கு ரூபா 7-0-0. டை மாதிரி 40×32 நம்பர் நூலிற் போட்ட 16 முழச் சேலை 1-க்கு ரூபா 6-8-0. இந்த விலைகளில் காப்பிக் கலர்ச்சேலையானாலும் பின்னேக் கறுப்புச்சேலையானாலும் ஒரேவிதமான தினிசுகள் புதிதாய் உற்பத்திசெய்திருப்பதால் விலைகள் கண்டு எழுதியிருக்கிறோம். இன்னும் மற்ற பனாரிஸ், பெங்களூர், கோயம்புத்தூர், சேலம், ஆரணி, காஞ்சிபுரம், கொர்நாடு, கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சிறுப்பள்ளி, உன்னூர், இன்னும் அனேக ஊர்களிலிருந்து ஏராளமாய்த் தருவித்து வைத்திருக்கிறோம். தாங்களும் வேணும் தினிசுகளுக்கு 100-க்கு 10 வீதம் அட்வான்ஸ் அனுப்பினால் தினிசுகள் அனுப்பப்படும்.

தாங்கள் நமது கம்பெனியில் ஒருமுறை தினிசுகள் தருவித்துப்பார்த்தால் எப்போதும் நம்முடைய கம்பனிக்கே ஆடர்செய்வீர்கள். தவிர வேறெவ்விடத்திலிருந்துந்தருவிக்கமாட்டீர்கள்.

தவிர 10-ம் நம்பர், 20-ம் நம்பர் நூல்களில் காட்டு வெட்டி சிகப்பு 1-ம் தரம், 2-ம் தரம், 3-ம் தரம் நூல்களில் வர்ணம்தீர்த்து, கண்ணல் சாயத்தில் 5 முத்தல் கட்டுகளும், சிமைக் வெட்டிச் சாயம் கறுப்பு மாதிரி 10-ம் நம்பர் 20-ம் நம்பர் 30-ம் நம்பர் 40-ம் நம்பர் நூல்களில் வெட்டிச் சாயமுள்ள 5 முத்தல் பெட்டிகளும் விலைகள் நயமாயும் இழைப்புக்கு தெரிலலாமலும் நயமான நூல்கள் தயாராகின்றன. தேவையுள்ளவர்கள் வி. பி. மூலம் ஆடர் செய்துகொள்ள வேண்டியது.

N.B. ஆடர்கள் உடனே தவறின்றி அனுப்பப்படும். வி. பி. சார்ஸ் பிரத்தியேகம்.

இப்படிக்கு,
M. S. Ramaswamy Iyer & Company,
Cloth & Yarn Merchants,
Singara Topu Street,
Madura, S. India.

26-10-18.


வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்


☞ Printed and published by S. T. M. P. Sithambaranatha Chettiar, for the Proprietors at the SaivaPrakasa Press, Jaffna.



## அடைவு நகைவிற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவுபிடிக்கும் தலவாக்கொல்லை 127-ம் நம்பர் புடைவைக் கடை க' தம்பு அவர்களிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டிசட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டியனவாகிய நகைகளின் விபரம்:

| ஆண்டு. | மாசம். | தேதி. | நம்பர். | ரூ.-சத. | | அடைவுவைத்தவர் பெயர். | ஊர். | அடைவுப்பொருளின் விபரம். |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1916 | தை | 27 | 33 | 5 | | கோவிந்தசாமி | ஸ்கல்ப்பா | 1 சோடி தங்கக் குண்டலம் |
| | பங்குனி | 25 | 120 | 19 | | கா. பீ. கதிர்வேலு | சி. கொத்தமல்லி | 1 சோடி கல்வைத்த கடுக்கன் |
| | ஆனி | 10 | 249 | 6 | | பூசி | காணவயல் | 1 சோடி பொன் மேலீடு |
| | ஆடி | 11 | 298 | 10 | | ஆரோக்கியம் | பெ. கொத்தமல்லி | 1 சோடி மேலீடு, 1 சோ. ஒன்னைப்பூ பொன் |
| | ஆவணி | 2 | 340 | 6 | 50 | ரெங்கசாமிக் கங்காணி | கல்கந்தை | 1 சோடி தண்டட்டி பொன. [1முருகு பவுன் |
| | ,, | 14 | 369 | 12 | | சின்னம்மா | தலவாக்கொல்லை | 1 சோடி மேலீடு, 1சோ. ஒன்னைப்பூ பொன்; |
| | ,, | 27 | 389 | 27 | | ப. சினித்துரை | வட்டக்கொடை | 1அரைஞாண்கொடி வெள், 1மோதிரம் பவுன் |
| | ,, | 28 | 393 | 10 | | கே. ஏ. கதிர்காமு | தலவாக்கொல்லை | 1 சோடி கொப்பு பவுன், 3மோதிரம் வெள்ளி |
| | புரட்டாதி | 2 | 403 | 5 | | காளிமுத்து | பெ. கொத்தமல்லி | 1 சோடி தண்டை வெள்ளி |
| | ,, | 3 | 404 | 10 | | உலை. சீ. ஸ்றிபன் | சி. லம்பாக்கொல்லை | 1 சோர்லை மணி 63 |
| | ,, | 5 | 408 | 30 | | மு. வே. கோவிந்தன் | தலவாக்கொல்லை | 11 சோடி பவுன் பூச்சக் கடுக்கன், 2 மோதி |
| | மார்கழி | 15 | 572 | 5 | | பேச்சி | சி. மல்லியப்பு | 3 கடுக்கன் பொன். [ரம் பொ., 1அரைஞாண் |
| 1917 | தை | 2 | 614 | 18 | 65 | அ. பி. சவுரிமுத்து | இட்டிணகிரி | 1 சோடி மேலீடு பொன் |
| | ,, | 5 | 620 | 10 | 50 | அரவன் கங்காணி | பிலாக்கொல்லை | 1 சோடி கடுக்கன், 1 சோடி கொப்பு பவுன் |
| | ,, | 12 | 637 | 23 | | கருப்பண்ணன் | தூசா | 3 சோ. கடுக்கன் பவுன், 1சோ. காப்பு வெள். |
| | ,, | 17 | 644 | 5 | | வடிவேல் | அ. புதுக்காடு | 2 காப்பு வெள்ளி, 1 மூக்குத்தி பொன் |
| | மாசி | 17 | 743 | 12 | | பூஞ்சிருவை | மடகம்புரை | 1 சலடி வெள்ளி |
| | ,, | 19 | 757 | 13 | | யூசேப் | தலவாக்கொல்லை | 1 பட்டம் பவுன் |
| | பங்குனி | 8 | 822 | 6 | | கதிர்வேலு | அ. புதுக்காடு | 1 சோடி கொப்பு பவுன |
| | ,, | 9 | 824 | 7 | | பழனிவேல் | மடக்கம்புரை | 1 சோடி மோதிரம் பவுன் |
| | ,, | 17 | 848 | 8 | | சின்னச்சாமி | விளாப்பத்தனை | 2 கொப்பு பவுன், 2 காப்பு வெள்ளி |
| | ,, | 26 | 882 | 6 | | காளிமுத்து | காணவயல் | 1 சோடி கொப்பு பவுன் |
| | சித்திரை | 2 | 902 | 5 | | முத்தம்மா | பிலாக்கொல்லை | 1 சோடி பஞ்சகலசக் கொப்பு |
| | ,, | 5 | 909 | 5 | | உலை. எ. டேவிட்பிறியம் | மினுகேசனை | 1 சோடி தண்டை வெள்ளி |
| | ஆனி | 8 | 1083 | 5 | 30 | பேச்சாயி | சின்னமல்லியப்பு | 1 சோடி காப்பு வெள்ளி [க்கு பொன் |
| | ஆடி | 3 | 1156 | 15 | | இ. சுப்பையா | தலவாக்கொல்லை | 1சோடி கொப்பு, 1சோடி காலைப்பூ, 1 பிலா |
| | ஆவணி | 3 | 1282 | 6 | | சின்னையா | ஸ்கல்பா | 1 சோடி கொப்பு, 1 சோடி ஒன்னைப்பூ |
| | ,, | 15 | 1341 | 12 | | சம்பூரணம் | தூசா | 1 மோதிரம், 2 அரும்புமோதிரம் பவுன |
| | புரட். | 1 | 1439 | 20 | | தெ. சிகாமணி | பனையடிதோட்டம் | 1 சோடி கல்பதித்த தோடு பவுன் |
| 1917 | ,, | 3 | 1454 | 55 | | முத்துச்சாமிக்கங்காணி | காகேசனைமலைத்தோ | 1பட்டம்,1மோதிரம்,2அரும்புமோதிரம்பவுன் |
| | ,, | 12 | 1513 | 7 | | முத்துச்சாமி | தூசா [ட்டம் | 2 சோடி கடுக்கன் பவுன் |
| | ,, | 25 | 1590 | 9 | | முத்துக்கங்காணி | அறுப்பிலாக்கந்தை | 2 சோடி கடுக்கன் பவுன் |
| | ,, | 26 | 1591 | 5 | | யேமிஸ் சில்வா | பத்தனை | 1 கல்பதித்த மாலை வெள்ளி |
| | ஐப்பசி | 2 | 1621 | 13 | 50 | சின்னப்பெருமாள்கங்காணி | காணவயல் | 1 சோடி மேலீடு, 1 சோடி உருக்குமணி பொ. |
| | ,, | 26 | 1767 | 15 | | மாரிமுத்து | டெடுக்தோட்டம் | 1 சோடி கல்வைத்த கடுக்கன் பவுன் |
| | ,, | 27 | 1772 | 5 | | பழனிடோபி | பெ. கட்டுக்கொல்லை | 1 வெள்ளி அரைஞாண்கொடி |
| | கார்த்திகை | 1 | 1789 | 6 | | அருணாசு | பிலாக்கொல்லை | 1 சோடி கடசம் வெள்ளி |
| | ,, | 5 | 1812 | 10 | | மு. முத்துவீரன் | அ. பழையகாடு | 1 சோடி விசிறிமுருகு பவுன் |
| | ,, | 12 | 1825 | 5 | | அப்பையா | கொட்டக்கலை | 1 சோடி சிமிக்கி பவுன் |
| | ,, | 17 | 1847 | 8 | | ச. முத்தையா | தலவாக்கொல்லை | 1 சோடி கல்வைத்த ஒன்னைப்பூ |
| | ,, | 19 | 1855 | 10 | | இ. சுப்பையா | ,, | 1 சோடி முருகு பவுன் |
| | ,, | 20 | 1859 | 7 | | சண்முகம் | செக்ரல்பத்தனை | 1 சோடி நாகபடம் பொன் |
| | ,, | 24 | 1877 | 7 | 25 | விக்கா | தலவாக்கொல்லைரோட் | 1 சோடி கடசம் வெள்ளி |

விற்பனவு:—1918 ஆண்டு டிசம்பர்மீ 30உ திங்கட்கிழமை இவற்றுள் திருப்பினவைகள் நீங்கலாக எஞ்சியனவைகள் டை தம்பு அவர்களின் 127-ம் நம்பர் புடைவைக்கடையிலிருந்து வெந்திஸில் விற்கப்படும்.

தெ. அ. இராசநாயகம், வெந்திஸ்மேஸ்தர்.